Saturday, November 22, 2014
10:01 AM

தீபாவளி மகிழ்ச்சி உறவு கொண்டாடுவதில்

பாலு நடராஜன்

அரங்கம் திரள வந்திருக்கும் அன்புடையீர்

படபடவென பட்டாசாக வெடிக்கும்
கவியரங்க தலைவர் நண்பர் TK அவர்களே
அமுத தமிழினிலே தீபாவளி பண்டமாகதித்திக்க பேசவும்
வண்ண ஓவியமாக கவியெனும் ஆடை படைக்கவும்
அனைவரையும் வானவில் போல் வளைத்து போடவும்
வந்திருக்கும் என் அன்பு கவிஞர் உறவுகளே
அனைவர்க்கும் என் தீபாவளி நல வாழ்த்துக்கள்

தீபாவளியின் போது இன்பம் ஊட்டுவது எது
என்பது கேள்வி

உணர்வதும் உணர்விப்பதுமே இன்பம்
நம் அன்பை மற்றவர்களுக்கு உணர்விப்பதும்
மற்றவர்களின் அன்பை நாம் உணர்வதுமே
வாழ்க்கயில் இன்பம்

உண்மையான இன்பம் அறிந்துகொள்ள
நல் உறவு வேண்டும் பகிர்ந்து கொள்ள
அருஞ்சுவை உணவாகட்டும்
அற்புத உடையாகட்டும்
பலனில்லை பகிர்ந்து கொள்ளாமலிருந்தால்

காத்திருப்பதிலே இன்பம், சந்தேகமில்லை
அதைவிட இன்பம் பின் வரும் சந்திப்பில்
அதைவிட இன்பம் பகிர்ந்து கொள்ளலில்
அதைவிட இன்பம் பாராட்டு பெறுவதில்

மணவாளனின் அன்பு பரிசு
மங்கையர்தம் அழகிற்கு மெருகூட்டும்
அந்த புதுப்புடவை அணியும்போது
மனதினிலே மகிழ்ச்சி பொங்கும்
ஆயினும்
அணிந்த போழுதினினும் பெரிதுவக்கும்
தன் புடவை "நன்றாக இருக்கிறது, எங்கே வாங்கினாய்"
என்ற வினவலுடன் பாராட்டு பெரும்பொழுது
உறவு வேண்டும் அந்த பாராட்டு பெற

நினைத்து பார்க்கிறேன்
மனதில் நிற்பது என்னவென்று
பிள்ளை பிராயத்தில்
என் அன்னை செய்த பலகாரமா
என் அன்பு தந்தை வாங்கி தந்த
ஊதா கலர் சொக்கையா
தீபாவளிக்கு வந்திடும் உறவினர்களும்
அவர்களின் சக குழந்தைகளுடனும்
விளையாடிய தருணமும் அல்லவா
நிற்கிறது மனதிலே!

சொல்கிறான் கவிஞன் புதுக்குறல்
இன்பம் எனப்படுவது யாதெனின் இப்புவியில்
யாவரும் கேளீர் எனும்சொல்

திருச்சி சாரதாசில் ஜவுளி தள்ளுபடி
விற்பனை துண்டு காகிதம் பறப்பதற்கு முன்பே
பறக்கும் கடிதாசுகள்
தீபாவளிக்கு யார் யார் வரவேண்டுமென
என் பாட்டி தாத்தாவின் அன்பு கட்டளை
இல்லையெனில் கிடைத்திராது ரயில் முன்பதிவு
ஞாபகம் வருகிறது எனக்கு

உண்மைதான் அன்பர்களே
அருஞ்சுவை உணவாகட்டும்
அற்புத உடையாகட்டும்
அவசியம்தான் பண்டிகைக்கு
ஆனாலும் நினைத்துப்பாருங்கள்
தனியாக உண்ணும் உணவில்
சுவைதான் உண்டோ
தன் உடையை தானாகவே அழகு பார்ப்பதில்
அருமை தான் உண்டோ

உண்ணும் உணவு மனதில் தங்கும்
2 மணி துளிகள்
உடையோ மகிழ்விக்கும் ஒரு நாள் பொழுது
மனதில் உறவு தங்கும் நேரமோ
கணக்கில் அடங்காது

உழைப்பதற்காக புலம் பெயர்ந்த
எண்ணின தமிழ் அன்பர்களே
இந்த தீபாவளி திருநாளில் உறவுகளாய்
கை கொடுப்பது நீங்கள் தானே

அயல்நாட்டில் இருந்தாலும்
பாதுகாப்பு பெட்டகமாய்
தமிழ் மொழியை, பண்பாட்டை
கலை இலக்கியத்தை பாதுகாப்பதுபோல்

பாரம்பரிய உணவையும், உடையையும்
விட்டுவிட கூடாது
இன்று போல் என்றும்
பாரோர் வியக்க பண்டிகைகள் கொண்டாட
ஒன்றிணைந்து
உறவுக்கு கை கொடுப்போம்

உறவுதான் மனதில்
நீங்காத மகிழ்ச்சி
உணவும் உடையும் மனதில்
தங்காத வெருட்சி

என்று கூறி, கொடுத்த வாய்ப்பிற்கு நன்றி
விடை பெறுகிறேன்
வாழ்க தமிழ்